## முதன்மை மாவட்ட நீதிமன்றம், கரூர்.
## அ.வ.எண்.118/2018

2025–ம் வருடம் அக்டோபர் திங்கள் 16–ம் நாளன்று 76 வது பிரதிவாதி தரப்பு சாட்சியாக பி.வா.சா.18–வது நபரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 54 விதியின்படி 95 வது பிரிவின்படி ஏற்பட்டுள்ளபடி திரு.பிரகாஷ், இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்.** | **: G.A.ராம்மூர்த்தி** | **தொழில்** | **:** |
| **த/பெ.** | **:** | **வட்டம்** | **:** |
| **முகவரி** | **:** | **மதம்** | **:** |
| **ஜாதி** | **:** | **வயது** | **:** |

**முதல் விசாரணை:–**

நான் இவ்வழக்கில் 76 வது பிரதிவாதி ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அது என்னுடைய தகவலின் பேரில் தயாரிக்கப்பட்டு, அதை நான் படித்து பார்த்து கையெழுத்திட்டேன். G.A.ராம்மூர்த்தியின் ஆதார் அட்டை நகல் பி.வா.சா.ஆ.99 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 16.10.2008 ஆம் தேதிய G.A.ராம்மூர்த்தி பெயரிலான கிரைய ஆவணம் எண்.7087/2008 சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.100 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பெயர் மாற்றம் செய்ததற்கான Gazette ஆதாரம் நகல் பி.வா.சா.ஆ.101 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (அசல் ஆவணத்தை தாக்கல் செய்யாமல் புகைப்பட நகல்களை தாக்கல் செய்தததால் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு ஆட்சேபனைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது.) வில்லங்க சான்றிதழ் (01.01.2006 முதல் 14.10.2025) ஆன்லைன் பதிவிறக்கம் பி.வா.சா.ஆ.102 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (வில்லங்க சான்றிதழ் முழுமையாக இல்லாததால்

ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.) G.A.ராம்மூர்த்தி பெயரிலான கூட்டுப்பட்டா எண்.1336 ஆன்லைன் பதிவிறக்கம் பி.வா.சா.ஆ.103 ஆக குறியீடு செய்யப்படுகிறது. DTCP இரசீது ஆன்லைன் பதிவிறக்கம் பி.வா.சா.ஆ.104 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (அசல் ஆவணத்தை தாக்கல் செய்யாமல் புகைப்பட நகல்களை தாக்கல் செய்தததால் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு ஆட்சேபனைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது.) வாதிகள் தாக்கல் செய்த வழக்கினை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

**1 முதல் 6, 8 முதல் 15, 18, 19, 21 முதல் 40, 42 முதல் 46, 48 முதல் 50, 52 முதல் 62, 64, 65, 67, 68, 69, 70 முதல் 75, 77 முதல் 87, 89 முதல் 98, 100, 102, 104 முதல் 107, 114, 115 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் தற்போது ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிப்பாளையத்தில் குடியிருந்து வருகிறேன். தும்பிவாடி கிராமத்தில் எனக்கும் என் குடும்பத்தாருக்கும் பூர்வீக வகையில் எந்த சொத்துக்களும் இல்லை. மேற்சொன்ன என் சொந்த ஊரிலிருந்து தும்பிவாடி கிராமம் சுமார் 100 கிலோமீட்டர் தொலைவு இருக்கும். பி.வா.சா.ஆ.100 நீங்கள் வாங்கிய கிரையபத்திரத்தை பி.வா.சா.ஆ.8 ன் அடிப்படையில் எழுதிக்கொடுத்த ரவிச்சந்திரனுக்கே அதில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களில் உரிமையில்லை என்றும் ஆகையால் பி.வா.சா.ஆ.100 ன் கீழ் உங்களுக்கு கிரையம் எழுதிக்கொடுப்பதற்கு ரவிச்சந்திரனுக்கு சட்டப்படி உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.102 வில்லங்க சான்றிதழ் யார் பெயரில் வழங்கினார்கள் என்று குறிப்பில்லை என்று சொன்னால் நான்தான் பெற்றேன். என்

பேரில் தான் வாங்கினேன். பி.வா.சா.ஆ.102 ஆவணம் ரவிச்சந்திரன் பெயரில் தான் பெறப்பட்டுள்ளது என்றும் நீங்கள் வழக்கிற்காக நீங்கள் வாங்கியது என்று பொய்யாக கூறுகிறீர்கள் என்றால் சரியல்ல. உங்கள் சொத்திற்கும் தும்பிவாடி கிராமத்திற்கும் 150 கிலோமீட்டர் தொலைவு இருக்கும் என்றும் நீங்கள் இன்றுவரை நீங்கள் வாங்கியதாக சொல்லும் சொத்தை நேரில் சென்று பார்க்கவில்லை என்றாலர் சரியல்ல 3 ஆண்டுகளுக்கு முன்பு சென்று பார்த்தேன். முன்பு ஸ்ரீராம் ரெடிமேட்ஸ் என்ற பெயரில் துணிக்கடை நடத்தி வந்தேன். தற்போது சும்மாகத்தான் உள்ளேன். பி.வா.சா.ஆ.104 DTCP அப்ரூவல் ஆவணத்தில் பதிவு எண்.DTCP/P/0149759/2017 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பணம் செலுத்தியதாக குறிப்பிட்டுள்ள தேதி 27.04.2018 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். நீங்கள் பணம் பெற்றுக்கொண்ட பிறகு தான் பதிவு செய்வார்கள் என்றும் நீங்கள் பணம் செலுத்திய தேதி 2018 ஆம் வருடம் ஆனால் பதிவு செய்த வருடம் 2017 ஆக இருப்பதால் பி.வா.சா.ஆ.104 ஆவணம் போலியாக உங்களால் தயார் செய்யப்பட்டுள்ளது என்றும் ஆகையால் தான் அசலை தாக்கல் செய்யாமல் புகைப்பட நகலை தாக்கல் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. 1 மற்றும் 2 பிரதிவாதிகள் சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.105/2018 மற்றும் அ.வ.எண்.322/2018 ஆகிய இருவழக்குகள் மாற்றாக்கம் செய்து இவ்வழக்குடன் இணைந்து அ.வ.எண்.45/2020 மற்றும் அ.வ.எண்.149/2021 வழக்குகள் நிலுவையில் இருக்கும்போதே மேற்சொன்ன இரண்டு வழக்குகளையும் காலதாமதம் ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகவே பி.வசா.ஆ.104 ஆவணத்தை தயார் செய்து தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.

தாவா சொத்து கோயிலுக்கு சொந்தமானது என்று வருவாய் ஆவணம் மூலம் பார்த்து தெரிந்துகொண்டீர்களா என்றால் கோவில் சொத்து என்று தெரிந்துகொண்டேன். கேள்வி புரியாததால் தவறாக பதில் அளித்துவிட்டேன். நீங்கள் கேள்வி புரிந்து கொண்டு சரியாகத்தான் பதில் அளித்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. 1912 ஆண்டிலேயே ரீசர்வே செட்டில்மெண்ட் பதிவேட்டில் தாவா சொத்து வாதி கோவிலுக்கு உள்ளதுஎன குறிப்புள்ளது என்றும் ஆகையால் ரவிச்சந்திரனுக்கோ அவரது முன் பாத்தியஸ்தருக்கோ எந்தவொரு பாத்தியமும் இல்லை என்றும் மேற்சொன்ன காரணத்தினால் நீங்கள் வாங்கிய கிரையம் செல்லாது என்று சொன்னால் சரியல்ல. 106 நபர்கள் கிரையம் பெற்றதற்காக நான் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. நீங்கள் கிரையம் வாங்கிய பி.வா.சா.ஆ.100 செல்லாததால் அதன் அடிப்படையில் வாங்கிய பி.வா.சா.ஆ.103 பட்டாவும் செல்லாது என்று சொன்னால் சரியல்ல கூட்டுப்பட்டாவில் உள்ளது. நீதிமன்றத்தில் இன்று சாட்சியம் அளிக்க ராமச்சந்திரா மிஷன் மற்றும் கரூர் மாவட்ட சகஜ நல்வாழ்வு சங்கத்தின் உறுப்பினர் சார்பாக T.P.K. பிரசாத் என்பவர் சாட்சியம் அளிக்க என்னை அழைத்தார். தாவா சொத்து கோவில் சொத்து என்றும் உங்களுக்கு சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**ஒம்/.K.H.இளவழகன்.,**
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.